293

தொழில் (எம்எம்டி.1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

கடித எண் 16261/ எம்.எம்.டி.2/2013–1 நாள் 16.05.2014

அனுப்புநர்
திரு அ. கருணாகரன், எம்.ஏ., (ச.ப.), எம்.எட்.,பி.எல்.,
அரசு கூடுதல் செயலாளர்.

பெறுநர்
திரு. சின்னத்தம்பி, (மற்றும் 24 ஊராட்சித்தலைவர்கள்)
ஊராட்சிமன்றத்தலைவர்,
நவ்வலடி ஊராட்சி
ராதாபுரம் வட்டம்,
திருநெல்வேலி.

ஐயா,

பொருள்: மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு – திரு.பி.சின்னத்தம்பி மற்றும் 24 ஊராட்சி மன்றத்தலைவர்கள், திருநெல்வேலி மாவட்டம் – நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாது மணல் தொழில் தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டி அளித்த மனு தொடர்பாக.

பார்வை:
1. தங்களின் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு நாள் 10.10.2013.
2. முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண். P /283145/பிரிவு–4 /2013.

***

பார்வை இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் தங்களால் அளிக்கப்பட்ட மனுவில், தாது மணல் ஆலைகளை தொடர்ந்து இயக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளீர்கள். இது தொடர்பாக அரசு கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிட்டுள்ளது என்பதனைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்பணிக்கப்பட்டுள்ளேன்.

"தாது மணல் தொடர்பான முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்ய தமிழக அரசானது, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சுரங்க குத்தகை பகுதிகளை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வருவாய்த்துறை முதன்மை செயலர் தலைமையின் கீழ் சிறப்புக்குழுவினை அமைத்து அரசாணை (நிலை) எண்.156 தொழில் (எம்எம்டி.1) துறை நாள் 08.08.2013–ல் ஆணை வெளியிட்டது. மேலும் திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள தாது மணல் கனிம குத்தகை பகுதிகளையும் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வருவாய்த்துறை முதன்மை செயலர் தலைமையின் கீழ் சிறப்புக்குழுவினை அமைத்து அரசாணை (நிலை) எண்.173 தொழில் (எம்எம்டி.1) துறை நாள் 17.09.2013–ல் ஆணை வெளியிட்டது. மேலும் ஆய்வுகள் முடியும் வரை தாது மணல் குவாரிகளின் செயல்பாட்டினை நிறுத்தி வைக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது".

தங்கள் உண்மையுள்ள

19.5.2014

அரசு கூடுதல் செயலாளருக்காக

நகல்:-
தனி அலுவலர்,
முதலமைச்சரின் தனிப்பிரிவு, தலைமைச்செயலகம்,சென்னை –9